[2011 பிப்ரவரி 7

சென்னையைப் பொறுத்த அளவிற்கு பல இடங்களிலே 1,600 கார்டுகளைப் பிரித்து 800 கார்டுகளுக்கு ஓர் இடம் பார்க்கிறபொழுது இடம் கிடைக்கவில்லை. அதுவும் குறிப்பாக, கோடம்பாக்கம் போன்ற பகுதியிலே இடம் கிடைக்கவில்லை. இடம் கிடைக்காத காரணத்தினால் கூட்டுறவு நிருவாகத்தின்மூலமாக இங்கே சென்னையைப் பொறுத்த அளவிற்கு mobile வண்டியை வைத்துக் கொண்டு, எப்படி மலைப் பகுதியிலே இடம் கிடைக்காத காரணத்தினால் ஓர் இடத்தில் mobile வண்டியில் பொருள்களை வைத்துக் கொண்டு கொடுத்தார்களோ அதேபோல, சென்னையைப் பொறுத்த அளவில் முதன்முதலாக, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் 10 ஆண்டுகளாக இருக்கிறது. சென்னையைப் பொறுத்த அளவிற்கு முதன்முதலாக என்று சொல்வதைவிட பரீட்சார்த்தமாக ஒரு மாத காலம் கொடுத்தால் சரியாக இருக்குமா என்ற அடிப்படையில்தான் கோடம்பாக்கம் பகுதியிலே நான்கு தினங்களுக்கு முன்னால், ஓர் இடத்தைக் குறிப்பிட்டு மூன்று தெருக்களுக்கு உள்ள கார்டுகளை வைத்துக்கொண்டு ஒரு பகுதியிலே கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டு அந்த வண்டிகளை நிறுத்தி ஒரு நாள் கொடுத்தார்கள். வீடு வீடாகப் பொருட்களைக் கொண்டு வந்து கொடுப்பதற்கு ஒரு திட்டம் இருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. 'இந்து' என்கிற ஆங்கிலப் பத்திரிகையிலே செய்தி வந்தது. அது அப்படியல்ல; இது mobile team என்றுதான் அதிலே போட்டிருந்தார்கள். வேறு சில பத்திரிகைகளிலே அப்படிச் செய்திகள் வந்தன; அது தவறான செய்தி. அப்படி ஒரு திட்டம் தமிழக அரசின் சார்பாக இப்பொழுது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

14—

பாதுகாப்பு

*121263—திரு. ஆர். சாமி:

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் சமணர் படுகைகள், குகைக் கோயில்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் தொகுதியில் உள்ள சமணர் படுகைகள் மற்றும் குகைக் கோயில்கள் மாநில மற்றும் மைய அரசினால் ஏற்கெனவே பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல்லியல் துறையைப் பொறுத்தவரையிலே பள்ளிக் கல்வித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு பல்வேறு காரியங்களை ஆற்றி வருகின்றார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில்கூட அவர்கள் துறையின் சார்பாக, பொதுவாக வெளிச்சத்திற்கு வராத மிக அற்புதமான ஒரு கண்காட்சியை அமைத்து அவர்கள் செவ்வனே செய்தார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே பள்ளிக் கல்வித் துறையிலும் பல மாற்றங்கள் வந்திருக்கின்றன. இன்றைக்கு மத்திய அரசால் அளிக்கப்படுகின்ற RSMA திட்டத்தின்கீழாக புதிய உயர்நிலைப் பள்ளிகள் வருகின்ற வாய்ப்பு உள்ளது என்று நான் கேள்விப்படுகின்றேன். இருக்கின்ற நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா? அப்படி ஏதேனும் செயற்குறிப்புகள் வரப்பெற்றிருக்கின்றனவா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்கிறீர்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல விரும்புகிறீர்களா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய அந்தக் கோரிக்கை அனைத்து உறுப்பினர்களாலும் கவனிக்கப்படக்கூடிய ஒன்று என்ற காரணத்தால்

[2011 பிப்ரவரி 7

விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் இப்போது நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு மத்திய அரசுக்கு நாம் கருத்துருக்களை அனுப்பியிருக்கிறோம். கடந்த ஆண்டு மத்திய அரசோடு பேசி, மத்திய அரசினுடைய இசைவையும் நாம் அதற்குப் பெற்றிருக்கிறோம். அதுகுறித்த ஒரு விரிவான அறிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், துணை முதலமைச்சர் அவர்களிடத்திலும் கலந்து பேசி, அவர்களுடைய ஒப்புதலைப் பெற்ற பிறகு நான் இந்த அவையிலே அளிக்கலாம் என்று இருக்கிறேன். அதுவரை மாண்புமிகு உறுப்பினர்கள் சற்றுப் பொறுமையாக இருக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரில் அமைந்திருக்கும் பழைமைவாய்ந்த தியாகராஜ சுவாமி திருகோயிலிலே மிகவும் அற்புதமான ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன. முசுகொண்ட சுவாமி ஓவியங்கள் என்று அழைக்கப்படும் அந்த ஓவியங்களை இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த டேவிட் சல்மான் என்கிற பேராசிரியர் தொகுத்து ஆங்கிலத்திலே நூலாகவும் வெளியிட்டிருக்கின்றார். அந்த ஓவியங்கள் இப்பொழுது அங்கே இருக்கின்ற துறை அதிகாரிகளால் திருத்தி அமைக்கப்படும் என்கின்ற பெயரிலே அதற்குப் பாதிப்பு ஏற்படுகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று பேராசிரியர் கருத்துத் தெரிவித்திருக்கின்றார். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதைத் தடுத்து நிறுத்தி, அந்தத் தொன்மைவாய்ந்த ஓவியங்களைப் பாதுகாக்க நம்முடைய தொல்லியல் துறை நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய திருக்கோயில்களிலே

2011 பிப்ரவரி 7]

இருக்கிற, அதைப்போல, குகைகளிலே இருக்கிற பாறை ஓவியங்கள் உள்ளிட்ட அனைத்து ஓவியங்களையுமே ஆவணப்படுத்துகிற முயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம். தமிழகத்தில் இருக்கக்கூடிய பாறை ஓவியங்கள் குறித்த ஒரு தொகுப்பு, தொல்லியல் துறை மூலமாக வெளியிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தினுடைய சார்பில் இப்போது தஞ்சை பெருவுடையார் கோயிலில் இருக்கக்கூடிய, முதலாம் ராஜ ராஜன் காலத்திய ஓவியங்கள் அனைத்தும் அழகான முறையிலே ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. பொதுவாக இத்தகைய திருக்கோயில்களிலே திருப்பணிகள் செய்கிறபோது அங்கே இருக்கக்கூடிய பல அருமையான ஓவியங்கள், நீண்ட காலமாக, நூற்றாண்டுகளாக இருந்த ஓவியங்கள் அழிக்கப்படக்கூடிய ஒரு நிலை இருந்ததை அரசு அறிந்து, குறிப்பாக திருப்புலிவனத்திலே இருந்த ஒரு சோழர் கால ஓவியம் இன்றைக்கு அழிக்கப்படுவதாகத் தகவல் வந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்கள். அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைக்கிணங்க, நானும் நம்முடைய மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி, திருக்கோயில்களிலே இத்தகைய திருப்பணிகள் செய்கிறபோதோ, வேறு பணிகள் மேற்கொள்கிறபோதோ, அங்கே இருக்கக்கூடிய பழைமையான ஓவியங்களையோ அல்லது சிற்பங்களையோ எந்தவிதத்திலும் பாதித்துவிடக்கூடாது; குறிப்பாக கல்வெட்டுகள் அடங்கி இருக்கக்கூடிய பகுதிகளைப் பெயர்த்து வைத்துவிடக்கூடாது, திருப்பணிகள் செய்யக்கூடிய காலக்கட்டங்களிலே, இன்னும் சொல்லப்போனால் sand blasting போன்ற பணிகள் நிச்சயமாக அங்கே மேற்கொள்ளப்படக்கூடாது என்று தடை விதித்து உத்தரவிட்டிருக்கிறார்கள். அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டதென்றால், இப்படிப்பட்ட பணிகள் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை உருவானால், நம்முடைய தொல்லியல் துறையோடு கலந்து பேசி, தொல்லியல் துறையினுடைய இசைவினைப் பெற்றுக்கொண்டுதான் இத்தகைய பணிகளை அங்கே மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அத்தகைய திருத்தி அமைக்கக்கூடிய பணிகள் நிச்சயமாக இடம்பெறாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கமலக்கண்ணன்.

[2011 பிப்ரவரி 7

திரு. ஜெ. கமலக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசிக்கு உட்பட்ட அனக்காவூர் ஒன்றியம், செங்காடு கிராமத்தில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,200–க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றார்கள். அப்பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியர் நிலை 2 பணியிடம் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்டுவிட்டதால் அந்த உடற்பயிற்சி ஆசிரியர் நிலை 2–ஐ மீண்டும் ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை என்ன காரணத்தினால் எடுத்திருப்பார்கள் என்று தெரியாது. இதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. ஒரு பள்ளியில் இத்தனை மாணவர்கள் இருந்தால் அந்த மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப இத்தனை உடற்பயிற்சி ஆசிரியர்கள் இருக்க வேண்டும்; இத்தனை உடற் கல்வி இயக்குநர்கள் இருக்க வேண்டுமென்கின்ற விதிமுறைகள் இருக்கின்றன. உறுப்பினர் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளியிலே அந்த விதிமுறைகளுக்குட்பட்டு அது நடந்திருக்கிறதா என்பதை நான் துறை அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து அதிலே நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதியில், குறிப்பாக செஞ்சி ஒன்றியத்திலே சமணப் படுகைகள், குகைக் கோயில்கள் நிறைய உள்ளன. இப்போது சமீபகாலமாக இந்தக் குவாரிகளில் கல்லை உடைப்பதால் இந்தச் சமணப் படுகைகள், குகைக் கோயில்களெல்லாம் அழிந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, செஞ்சி பகுதியில் இருக்கின்ற சமணப் படுகைகளெல்லாம் இப்போது அழிந்து கொண்டிருக்கின்ற நிலையில் உள்ளன. அதுமட்டுமல்லாமல், திருவக்கரை வக்கிரகாளியம்மன் கோயில் ராஜ ராஜ சோழனுடைய பெரிய தாயாரால் கட்டப்பட்ட கோயில். அந்தக் கோயிலுக்கு அருகிலே, 200 மீட்டர், 300 மீட்டர் அருகிலே, மிகப் பெரிய அந்தக் கோயிலைச் சுற்றி இன்றைக்கு கல் குவாரிகள் இருப்பதால், அந்தக்

2011 பிப்ரவரி 7]

கோயிலே பாதிக்கப்படுகிற நிலையில் இருக்கிறது. இதுகுறித்து நீதிமன்றத்திற்கெல்லாம் சென்றிருக்கிறார்கள். அதைப்போல, குன்னம் பகுதியிலும் இருக்கிற கோயிலிலும் அப்படி இருக்கிறது. ஆனால், நீதிமன்ற ஆணைகளெல்லாம் இன்றைக்கு மதிக்கப்படாமல், பல்வேறு இடங்களிலே கல் குவாரிகளுக்கு அனுமதி கொடுப்பதால், இந்தச் சின்னங்கள் எல்லாம் அழிகின்ற நிலையில் இருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல, கோயில்களைப் புனரமைக்கின்றபோது, வர்ணங்கள் பூசுகின்ற பெயரிலே அந்தச் சின்னங்களெல்லாம் இன்றைக்கு அழிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், ஆங்காங்கு இருக்கிற அந்தக் கோயில்களில் இருக்கின்ற நிருவாகிகள், பூசாரிகள் அவர்களாகவே, தாங்களாகவே, என்ன செய்கிறார்களென்றால், அங்கு வருகிற நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டு, இருக்கிற கோயில்களை தங்கள் சௌகரியத்திற்கு இடித்துப் புனரமைக்கிறோம் என்று சொல்லி, அந்தச் சின்னங்களை இடித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போதுகூட திண்டிவனத்திலே திந்திரினீஸ்வரர் கோயில், ராஜ ராஜன் காலத்திலே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கோயிலிலே எங்கே பார்த்தாலும்—அந்தக் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களைப் பார்த்தால், மக்கள் வந்து அமருவதற்கு விஸ்தீரணமாகக் கட்டியிருப்பார்கள். இப்பொழுது பார்த்தால், அந்தக் கோயிலைச் சுற்றி, நெருக்கடியாக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், கோயில்களில் இருக்கக்கூடிய பழங்காலத்துப் பொருட்களைப் புனரமைக்கின்றபோது, அதன் மதிப்பு தெரியாமல் அல்லது தெரிந்திருந்தும் அதை மறைத்து அந்தப் பொருட்களை இப்போது விற்கிறார்கள். இப்போது திந்திரினீஸ்வரர் கோயிலிலே, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அந்தக் கோயிலின் மணி—கிட்டத்தட்ட 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மணி; அதற்கு மதிப்பே கிடையாது—அந்த மணியை விற்றிருக்கிறார்கள். நான் யார் மீதும் குற்றம் சொல்லவில்லை. இதுமாதிரி, அந்த நிருவாகத்திலே அந்தக் கோயிலிலே ஒரு முறை கொண்டு வரப்பட வேண்டும். கோயில்களாக இருக்கட்டும்; பழங்காலச் சின்னங்களாக இருக்கட்டும்; தொல்லியல் துறையில் என்ன சொல்கிறார்கள் என்றால், தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தால்தான் நாங்கள் மேற்பார்வையிடுவோம் என்று சொல்கிறார்கள். ஆனால், ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு, இரண்டாயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட சில கோயில்கள் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. அதற்குச் சில கட்டுப்பாடுகளைக்

கொண்டு வந்து, இந்தச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கோயில்களில் இருக்கின்ற பழங்காலப் பொருட்களை அனுமதியில்லாமல், அவை சிறிய பொருட்களாக இருந்தாலும், பெரிய பொருட்களாக இருந்தாலும், அரசினுடைய அனுமதியில்லாமல் விற்கக்கூடாது என்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களைப் பொறுத்தமட்டிலே, சில திருக்கோயில்கள் நேரடியாக தொல்லியல் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன. மற்ற பெரும்பான்மையான கோயில்கள், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் குறிப்பிடுகின்ற பெரும்பான்மையான கோயில்கள், அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டிலே வரக்கூடிய கோயில்கள். அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கக்கூடிய கோயில்களிலேகூட, புனரமைப்புப் பணிகள் அல்லது திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றபோது–உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்களுடைய கேள்விக்குப் பதிலளிக்கின்றபோது நான் குறிப்பிட்டதைப்போல–தொல்லியல் துறையினுடைய அனுமதியையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். ஆங்காங்கே இருக்கக்கூடிய அறங்காவலர் குழு, ஆங்காங்கே இருக்கக்கூடிய திருப்பணிகளைச் செய்வதற்கு அவர்கள் முடிவெடுக்கிறார்கள். அது முழுக்க முழுக்க இந்து சமய அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டிலே வருகிறது. அப்படித் திருப்பணிகளைச் செய்கின்றபோது, அங்கே இருக்கக்கூடிய பழங்காலச் சின்னங்கள், அங்கே இருக்கக்கூடிய கல்வெட்டுக்கள், ஓவியங்கள், சிற்பங்கள் இவை அழிக்கப்படாமல், பாதுகாக்கப்பட வேண்டிய கடமையும் நம் அனைவருக்கும் இருக்கிற காரணத்தால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே இதற்குக் குறிப்பாக ஓர் அறிவுரை வழங்கினார்கள். எனவே, இதற்குப் பிறகு, ஒரு காலக் கட்டத்திற்குப் பிறகு இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்படுகிறபோது, நிச்சயமாக தொல்லியல் துறையோடு கலந்தாலோசித்து, அங்கே அதுபோன்ற பழைய சின்னங்கள் அழிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

2011 பிப்ரவரி 7]

நிச்சயமாக அது கடைப்பிடிக்கப்படும் என்று நான் உங்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன்.

கல் குவாரிகளைப் பொறுத்தமட்டிலே; அவர்கள் சொன்னார்கள், மூலக் கேள்விக்கேகூட அதுதான் அடிப்படையான காரணம். மாண்புமிகு உறுப்பினர் சாமி அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய மூலக் கேள்விக்கும் அதுதான் காரணமாக இருந்திருக்கிறது. அது ஒரு protected monument என்று வரையறுக்கப்பட்ட இடம். அது protected monument. அங்கே எந்தவிதமான கட்டடப் பணிகளோ அல்லது வேறு பணிகளோ செய்ய முடியாது. அங்கிருந்து 100 மீட்டர் தொலைவிற்கு எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், அது prohibited area என்று சொல்கிறார்கள். அங்கேயும் கட்டுமானப் பணிகளைச் செய்ய முடியாது. அந்த 100 மீட்டர் எல்லையிலேயிருந்து 200 மீட்டர் தொலைவிற்கு regulated area என்று வரையறுத்திருக்கிறோம். அங்கே அவர்கள் கட்டுமானப் பணிகளைச் செய்வதாக இருந்தால், அதைத் தடுப்பதற்கு முடியவில்லை. எனவே, சட்டங்களைப் பொறுத்தமட்டில், தொல்லியல் துறையினுடைய சட்டங்கள் ஒருமாதிரியாக இருக்கின்றன; Mining Department–இலே ஒரு மாதிரியாக இருக்கிறது. இதுகுறித்து கலந்து பேசுவதற்கு தலைமைச் செயலாளர் அளவிலே ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, ஓர் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து ஆய்வுகள் வந்ததற்குப் பிறகு, அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இதற்கு ஒரு தீர்வு காணப்படும் என்று நம்புகிறேன். இதற்கு நடுவிலே நீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையிலே ஆங்காங்கே குவாரிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு உட்பட்டதாக இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

15—

தார்ச் சாலை

***107206—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—